# இலங்கை: சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்கள் புலிகள் இயக்கத்தால் படைகளில் சேர்ப்பு

*இழந்த படையினரை சிறார்களைக் கொண்டு நிரப்புவதற்கு புலிகள் உத்தேசிக்கலாம்*

(நியுயோர்க்: ஜனவரி 14, 2005) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது (தமிழ் புலிகள் அல்லது புலிகள் இயக்கம்) சுனாமி அனர்த்தத்தினால் பாதிககப்பட்ட சிறார்களை தமது படையினர்களாகப் பாவிப்பதற்காக பிடித்துச் செல்கின்றது, என ஹியூமன் றைட்ஸ் வொட்ச் (மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு) இன்று தெரிவித்தது.

ஏற்கனவே பெரும் தொகையான சிறார்களை தமது படைகளில் சேர்த்துள்ள புலிகள் இயக்கமானது, தற்போது சுனாமி அனர்த்தத்தால் தமது படையணிகளில் ஏற்பட்ட இழப்புக்களை இச்சிறார்களைக் கொண்டு நிவர்த்திசெய்ய உத்தேசிக்கலாம் என்றும் ஹியூமன் றைட்ஸ் வொட்ச் அமைப்பு தெரிவிக்கின்றது.

இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதியான மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் அமைந்துள்ள சுனாமி அனர்த்தத்தில் உயிர் தப்பியோருக்கான முகாம்களில் இருந்து மூன்று சிறார்கள் இவ்வாறு பிடித்துச் செல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விபரங்களை யுனிசெப் (ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்) வெளியிட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களிலும் புலிகள் இயக்கமானது தனது படைகளில் சிறார்களை சேர்த்துக் கொள்ளுவதாக மேலதிகமான தகவல்கள் ஹியூமன் றைட்ஸ் வொட்ச் அமைப்பிற்கு கிடைத்துள்ளன.

“சுனாமி அனர்த்தத்தால் இச் சிறார்கள் அநாதைகள் ஆக்கப்பட்டும் இடம் பெயர்ந்தும் உள்ள இக்கட்டானதும், மிக அவலமானதுமான நிலைமையினை வாய்ப்பாகப் பயன்படுத்தி புலிகள் இயக்கமானது இவர்களை பலாத்காரமாக பிடித்துச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது” என ஹியூமன் றைட்ஸ் வொட்ச் அமைப்பின், சிறார்கள் உரிமைகள் தொடர்பான பிரச்சாரப் பணிப்பாளர் ஜோ பேக்கர் தெரிவித்தார். “ஏற்கனவே மிக மோசமாக சகலதையும் இழந்து போயுள்ள குடும்பங்களிடம் இருந்து இவ்வாறு சிறார்களைப் பிடித்துச் செல்லும் இம்மனச்சாட்சியில்லாத நடவடிக்கையைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.”

திருகோணமலையில் அமைந்துள்ள அகதி முகாமொன்றிலிருந்து சுனாமி அனர்த்தத்திற்கு முன்னதாக புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டு அவர்களிடமிருந்து தப்பிச் சென்ற 16 வயதுடைய சிறுவன் ஒருவன், மிக நம்பத்தகுந்த வட்டாரங்களிடம் கூறும்போது, புலிகள் இயக்கமானது மிக அண்மையிலும்கூட அம்முகாமில் இருந்து மூன்று சிறுமிகளை பிடித்துச் செல்வதை தான் நேரடியாக கணட்தாக தெரிவித்தான். ஜனவரி மாதம் மூன்றாம் திகதியும் யாழ்ப்பாணத்தில் 13 வயதுடைய இரு சிறுவர்கள் புலிகள் இயக்கத்தால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்கள் என சுதந்திரமான மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் ஆவணப் படுத்தியுள்ளனர்.

சிறார்களை படையினர்களாக தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளும் விடயத்தில் புலிகள் இயக்கத்திற்கு ஓர் நீண்ட வரலாறு உண்டு. 2002ம் ஆண்டு முற்பகுதியில் நடைமுறைக்கு வந்த இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமான மோதல் தவிர்ப்பு நிலைமையின் கீழ் புலிகள் இயக்கமானது ஆயிரக்கணக்கான சிறார்களை தமது படைகளில் சேர்த்துள்ளார்கள் என்பது தொடர்பாக ஆவணப் படுத்தப்பட்ட அறிக்கை

ஒன்றை ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பானது 2004ம் ஆண்டு நொவெம்பர் மாதம் வெளியிட்டு இருந்தது. சிறார்களை தம் படையணிகளில் சேர்த்துக் கொள்வதற்காக புலிகள் இயக்கமானது நெருக்குவாரம் அளித்தல், அச்சுறுத்தல் மற்றும் பலாத்காரமாக கடத்திச் செல்லுதல் போன்ற வழிமுறைகளை பாவிக்கின்றது என்பதையும் ஹியூமன் றைட்ஸ் வொச் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு முன்னர் சண்டைகள் மற்றும் தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகள் என்பவற்றில் சிறார்கள் தொடர்ச்சியாக பாவிக்கப்பட்டு வந்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தின் போது முல்லைத்தீவில் அமைந்திருந்த புலிகள் இயக்கத்தின் பயிற்சி முகாமில் இருந்து கடல் அலையினால் அள்ளிச் செல்லப்பட்ட சுமார் 400 பெண்களும் சிறுமிகளும் உட்பட, புலிகள் இயக்கமானது 700இற்கும் 2000இற்கும் இடைப்பட்ட படையினர்களை இவ் அனர்த்தத்தில் இழந்துள்ளது என பல்வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகள் இயக்கத்தின் கடற்படை அணியானது பாரிய இழப்பை சந்தித்து உள்ளதாக இலங்கை அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"சுனாமி அனர்த்தத்தின் பின் புலிகள் இயக்கமானது தமது படையணிகளை மீளக் கட்டி எழுப்பும் நோக்கில் செயற்ப்படுவதால், சிறார்கள் மிகவும் பாதுகாப்பற்றதொரு நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்." எனவும் பேக்கர் கூறினார். " பொதுவாக எப்பொழுதும் சிறார்களே குறிவைக்கப் படுபவர்களாக இருந்தனர். ஆனால் சுனாமி அனர்த்தத்தினால் தமது குடும்பங்களையும் வீடுகளையும் இழந்த சிறார்களே தற்பொழுது புலிகளின் படைச் சேர்ப்பிற்காக குறிப்பாக குறிவைக்கப் படுபவர்களாக உள்ளனர்."

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என அமைக்கப்பட்ட முகாம்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் கொண்டு செல்லுமாறு புலிகள் இயக்கமானது பல அழுத்தங்களை இட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக முகாம்களை இடம்மாற்றினால் அங்கிருக்கும் சிறார்கள் புலிகளால் பிடித்து செல்லப்படக்கூடிய மோசமான ஆபத்திற்கு முகம் கொடுக்கக்கூடும் என்பது தொடர்பாகவும் ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பானது தனது ஆழ்ந்த அக்கறையைத் தெரிவிக்கிறது.

மிக ஆபத்தான நிலையில் உள்ள இச்சிறார்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படக்கூடிய வகையில், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட முகாம்கள் மீது தீவிர சர்வதேச கண்காணிப்பு இருக்க வேண்டுமென ஹியூமன் றைட்ஸ் வொச் வேண்டுகோள் விடுக்கிறது. இலங்கையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிதி உதவிகளை வழங்குகின்ற சர்வதேச அரசாங்கங்கள், புலிகள் இயக்கத்தினால் இச் சிறார்கள் பிடித்துச் செல்லும் நடவடிக்கையினை பகிரங்கமாக கண்டிக்கின்ற அதேவேளையில், புலிகள் இயக்கமானது தமது படையணிகளில் உள்ள சிறார்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோர வேண்டும். அநாதைகளாக்கப்பட்ட மற்றும் குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்ட சிறார்களை பதிவு செய்வதற்கான முயற்சி மற்றும் வயது குறைந்தோர் படைகளில் சேர்க்கப்படுவதை கண்காணித்தல் என்னும் யுனிசெப் (UNICEF) அமைப்பின் முயற்சிகளை இவ்வமைப்பு மிகவும் வரவேற்கின்றது.

ஹியூமன் றைட்ஸ் வொட்ச்சின், "அச்சத்திற்குள் வாழ்தல்: இலங்கையில் சிறார் படையினரும் புலிகள் இயக்கமும்" என்னும் அறிக்கையினை www.hrw.org/reports/2004/srilanka1104 என்னும் இணையத்தளத்தில் பார்க்கலாம்